**செய்தி வெளியீடு**
**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண்.179** **நாள் : 10.11.2018**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கையாக பல்வேறு போட்டிகள் நடத்தப்பட உள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி, பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கையாக ஓவியம், ஸ்லோகன், கொல்லேஜ், குறும்படங்கள், ஸ்கிட், மீம்ஸ், ஜிங்கிள்ஸ், கதை ஆகிய போட்டிகள் நடத்த ஆணையிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், ஒவ்வொரு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மேற்படி போட்டிகளை நடத்தி அவற்றில் சிறந்த ஒரு படைப்பை தேர்வு செய்து, பள்ளி மற்றும் கல்லூரி முதல்வர்கள் அதன் மென்வடிவ நகலினை (Soft Copy) பெருநகர சென்னை மாநகராட்சி http://chennaicorporation.gov.in/election_competition என்ற இணையதளத்தில் 17.11.2018 அன்று மாலை 5.45 மணிக்குள் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரியிலும் முதலிடம் பெறும் படைப்பினை மட்டும் மென்வடிவத்தில் பதிவேற்றம் செய்தும், அதனை மட்டும் மாவட்ட தேர்தல் அலுவலகம், ரிப்பன் மாளிகை, சென்னை – 3 என்ற அஞ்சல் மூலமாகவும் அனுப்பி வைக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

குறும்படங்கள் – mp4 30MB

ஸ்கிட், மீம்ஸ், ஜிங்கிள்ஸ் – mp4 15MB

Script writing, Poster making

ஸ்லோகன், கொல்லேஜ் – JPEG 4MB

அவ்வாறு வரப்பெறும் படைப்புகளில் வகை வாரியாக முதல் 3 இடங்களை பெறும் படைப்புகள் தேர்வு செய்யப்பட்டு அவற்றிற்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்படும். எனவே, சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி முதல்வர்களும் தங்களுடைய பள்ளி மற்றும் கல்லூரிகளில் போட்டிகள் நடத்தி முதலிடம் பெறும் படைப்பினையோ அல்லது சிறந்த ஒரு படைப்பினையோ தங்களுடைய பள்ளி மற்றும் கல்லூரி சார்பாக பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் மற்றும் அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**